பதிவு எண் : M. 6311 ★ தோலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எல்.

மலர் : 16] சென்னை : மார்கழி 10 (24—12—68) செவ்வாய் ★ கொழும்பு : மார்கழி 11 (25—12—68) புதன் [இதழ் : 158

சனவரி முதல் வாரத்தில் புதிய ரேஷன் கார்டுகள் கிடைக்கும்

சென்னை நகரில் சனவரி 4 அல்லது 5-ந் தேதியிலிருந்து புதிய ரேஷன் கார்டுகள் வழங்கும் வேலை ஆரம்பமாகும்.

சனவரி மத்திக்குள் கார்டுகள் வழங்கும் வேலை நிறைவு பெற்று விடும் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

நகரில் மூன்றிலிரண்டு பங்கு வீடுகளில் கார்டுகள் பற்றிக் கணக்கெடுக்கும் வேலை முடிவடைந்துவிட்டது.

புதிய கார்டுகளைத் தயாரிக்கும் வேலை இந்த வார இறுதியில் மேற்கொள்ளப்படும்.

அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் விஷமத்தனம்

அரசியல் போர்வையில் சுயநலவாதிகளின் போக்கு!

'கருத்திருமன்'களுக்கு மத்திய அமைச்சர் கொடுக்கும் சூடு!

பாதை தவறிச் சென்றுவிட்ட காங்கிரசின் நிலையையும் சுட்டிக்காட்டுகிறார்

பெங்களூர், டிச. 24

"ஓட்டுக் கேட்கச் செல்லும் அரசியல்வாதிகள் கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளிடம், அவர்களுடைய விளைபொருள்களுக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்; தொழிலாளர்களிடம் சென்று அவர்களுக்கு அதிக ஊழியம் தரப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள்.

"பிறகு, நகரங்களில் உள்ள நடுத்தர மக்களிடம் சென்று, 'விலைவாசிகள் குறையவேண்டும்' என்று கூறுகிறார்கள்.

"இவை அனைத்தும் இயலாததாகும் என்று தெரிந்திருந்தும் இவ்வாறு அவர்கள் கூறுகிறார்கள்.

"தேர்தலில் போட்டியிடுவதற்காகப் பெரும் பணக்காரர்களிடமிருந்து இலட்சக்கணக்கில் பணமும், வண்டிகளும் பெற்றுக்கொள்கிறார்கள்; அவற்றுக்குப் பதிலாக, எதுவும் செய்வதாக வாக்குறுதி அளிக்காமலேயே நன்கொடைகள் அனைத்தையும் பெற்றுவிட்டதாக மக்கள் நம்பவேண்டும் என்று இந்த அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள்.

"பொது வாழ்வுக்கான நியதிகள் அழிந்து போவதைப் பற்றியோ அல்லது அந்த அழிவைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற இந்த அரசியல்வாதிகள் சிந்தனை செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது வீணாகும்."

இவ்வாறு மத்திய செய்தித் துறை அமைச்சர் கே. கே ஷா, செய்தியாளர்களிடமும், அனைத்திந்தியப் பத்திரிகாசிரியர் மாநாட்டிலும் பேசுகையில் கருத்தறிவித்தார்.

திரு. ஷாவின் கூற்று, தமிழ்நாட்டுக் காங்கிரசாரைப் பொறுத்த வரை நூற்றுக்கு நூறும் பொருத்தமாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகச் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் போன்றவர்கள், திரு. ஷா எடுத்துக் கூறியுள்ளபடியே இடத்துக்கு ஏற்பவும், நேரத்துக்கேற்பவும் பேசிவருவது நினைவுகூரத்தக்கது.

திரு. ஷா மேலும் பேசுகையில் கூறியதாவது :—

பாதை தவறிவிட்டோம்

"நாட்டின் இப்போதைய சீரழிவைத் தடுத்து நிறுத்தி சனநாயகத்திற்கு முறையான நியதிகளை வகுத்துத் தர பத்திரிகைகளால்தான் இயலும்; இந்தப் பணி மிகவும் அவசரமானது; 20 ஆண்டுகளாகக் நாம் பாதை தவறிச் சென்றுவிட்டோம்; இனியும் அவ்வாறு செல்வோமானால், உண்மையான சனநாயக மதிப்பு கனி நாம் என்றென்றும் இழந்துவிடக்கூடும்.

பொது வாழ்வு பற்றிய நியதி களை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதில் சிந்தனையாளர்களுக்கு அக்கறை உண்டு; ஆனால், அரசியல்வாதி சமுதாயத்தின் பல வீன ங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறார்.

எழுத்துரிமை, பேச்சுரிமை எங்கே?

இன்றைய நிலைமை இன்னும் பத்து ஆண்டுகளுக்கு நீடிக்குமானால், பத்திரிகைச் சுதந்தரம் எங்கே இருக்கும்? பேச்சுரிமையும் எழுத்துரிமையும் எங்கே இருக்கும்?

சனநாயகத்தில் பேச்சுரிமையும், செயல் உரிமையும் தவருகப் பயன்படுத்தப்படலாம்; அரசியல்வாதி அதற்குத் தயாராக இருப்பார்; ஆனால், பொது வாழ்வு பற்றிய நியதிகள் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டால், அவரால் அவ்வாறு செய்ய முடியாது.

தற்போதைய நிலைமை மேலும் மோசமாகமல் தடுப்பதற்கு இந்திய பத்திரிகைகளில் பொறுப்புணர்ச்சி கொண்டவைகள், இத்துறையில் போதுமான முயற்சி செய்யவில்லை என்பது வருந்தக்கூடிய ஒன்றாகும்.

பத்திரிகைகளின் கடமை

சனநாயகம் என்னும், நற்பண்புகளுக்கும் -- தீய குணங்களுக்கும் இடையே இடைவிடாது நடைபெற்று வரும் ஒரு போராட்டம் என்று கூறலாம்; பத்திரிகைகள் நற்பண்புகளுக்கு ஆதரவாக இருக்கத் தவறிவிட்டால் அவை என்ன பணியை ஆற்றமுடியும்?

"நான் ஒரு நல்ல பணியைச் செய்கிறேன்; எனக்குப்பாராட்டுக்கூட கிடைப்பதில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்; ஆனால், கறுனா வீசிக் கூட்டங்களைக் கலைத்தால் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியில் இடம் கிடைக்கிறது; ஆகவே, காலும் கறுனா வீசிக் கூட்டங்களைக் கலைக்க வேண்டும் என்றுதான் எண்ணத்தோன்றும் பிரச்சினை எழுகிறது.

"பொது வாழ்வுக்கான நியதிகள் அழிந்து போவதைப் பற்றியோ அல்லது அந்த அழிவைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற இந்த அரசியல்வாதிகள் சிந்தனை செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது வீணாகும்."

அறிவிப்பு

நாளை (25—12—68) நமது அலுவலகத்திற்கு விடுமுறையாகையால், 'நம் நாடு' அடுத்த இதழ், 26—12—68 அன்று சென்னையிலும், மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

இந்தியாவுக்குமற்றொரு அமெரிக்க உதவி

புதுடில்லி, டிச. 24—

புதுடில்லியில் வையெழுத்தான ஒப்பந்தம் ஒன்றின்படி அமெரிக்கா இந்தியாவுக்கு 23 இலட்சம் டன் கோதுமையையும், மற்ற வில்லை பொருள்களையும் வழங்கும்.

இந்தப் பண்டங்களின் பெறுமானம் ரூ. 125.33 கோடியாகும்.

மோதுமை தவிர 98,000 டன் கொழுப்பு, 4,000 டன் பால் பொடி, 200 டன் புகையிலை ஆகியவற்றையும் அனுப்பும்.

'இந்தித் திணிப்பை முறியடிக்க காங்கிரசைத் தோற்கடியுங்கள்'

நாகர்கோவில்வாக்காளர்கட்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வேண்டுகோள்

நாகர்கோவில், டிச. 24—

"இந்தித் திணிப்பை முறியடிக்க வேண்டுமானால், நாகர் கோவில் தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரசை முறியடித்தாக வேண்டும்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இங்கு நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் வற்புறுத்தினர்.

கூட்டணி வேட்பாளரான டாக்டர் மத்தியாசுக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு வாக்காளப் பெருமக்களை அவர் கேட்டுக் கொண்டு மேலும் பேசுகையில் கூறியதாவது :—

"தமிழகப் பள்ளிகளில் இந்தியை அறவே ஒழித்துவிட்டோம்; ஆனால்டெல்லி அரசோ இந்தியைக் கற்பிக்கும்படிக் கூறுகிறது.

"தமிழக மக்கள் இந்தியை ஏற்கவில்லை என்பதை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்த, இந்தத் தேர்தலில் காங்கிரசைத் தோற்கடித்துக் காட்ட வேண்டும்.

அண்மையில், அனைத்திந்திய வானொலியில் இந்தியச் செய்தி அறிக்கைக்கு முதலிடம் கொடுத்திருப்பதைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை; என் பதையும் இந்தத் தேர்தல் மூலம் நாம் காட்டியாக வேண்டும்."

தலைக்கு ரூ. 47.50 செலவில் விருந்து!

மத்திய அரசு நிறுவனம் நடத்திய ஆடம்பர விழா

புதுடில்லி, டிச. 24—

மத்திய அரசு நிறுவனமான தேசிய கனிவள மேம்பாட்டு கார்ப்பொரேஷன் ஆடம்பரமான விருந்தொன்று நடத்திருக்கிறது; இந்த விருந்தில் ஒவ்வொருவருக்கும் ரூ. 47.50 மதிப்புள்ள பண்டங்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன.

கடந்த நவ. 10-ம் நாள் பாய்லதில்லா இரும்புக் கனித் திட்டத் துவக்க விழாவை முன்னிட்டே இந்த விருந்து நடைபெற்றிருக்கிறது.

அந்த விழாவுக்கு மொத்தம் ரூ. 1.5 இலட்சம் செலவிடப் பட்டதாம்.

நாடாளுமன்ற மேலவையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் திரு. பி. சி. சேதி அளித்த பதில்களிலிருந்து மேற் கண்ட விவரம் தெரிய வந்துள்ளது

விசாரகப்பட்டினத்திலுள்ள ஓர் உணவு விடுதி மூலம் இந்த விருந்து அளிக்கப்பட்டிருக்கிறது.

முக்கிய விருந்தினர்களுக்கு பகலிலும் இரவிலும் விருந்தளிக்கப்பட்டதாம்.

டிகால் இந்தியாவருகை

காட்மாண்டு, டிச. 24—

பிரான்சு நாட்டு அதிபர் டிகால், அடுத்த ஆண்டு முற்பகுதியில் இந்தியாவுக்கும், நேப்பாளத்துக்கும் வருகை தரக்கூடும் என்று நேப்பாளத்திலுள்ள பிரெஞ்சுத் தூதர் கூறினர்.

இந்தியா, நேப்பாளம் உட்பட சில ஆசிய நாடுகள் டிகாலை அழைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் மின்சாரப் பஞ்சம் நீர்ந்தது?

சென்னை, டிச. 24—

தமிழகத்தில் மின்சார நிலைமை கனிசமாக வளர்ச்சியடைந்திருக்கிறது என்றும், தற்போதுள்ள நிலைமை நீடித்தால் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு மின்சார வெட்டு பற்றி அஞ்சவேண்டிய தில்லை என்றும் மின்சார வாரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வேலூர் நாராயணன் பரோடா புறப்பாடு

மேயர்கள் மாநாட்டில் கலந்துகொள்கிறார்

சென்னை, டிச. 24—

சென்னை மேயர் வேலூர் நாராயணன், பரோடாவில் நடக்கவிருக்கும் அனைத்திந்திய மேயர் மாநாட்டில் வலுகொள்வதற்காக மேற்கு ரயில்மூலம் புறப்பட்டார்.

இம்மாநாடு டிசம்பர் 27-ம் நாள் துவங்கி இரு நாட்கள் நடைபெறும்.

கதிரகம்
ஆசிரியர் இரா.செழியன்
திருவள்ளுவராண்டு 1999 மார்கழி 10 (24—12—68) செவ்வாய்

காங்கிரசின் புதிய வலை!

'காங்கிரசுக் கட்சி ஒன்றினுல் மட்டுந்தான் நிலையான ஆட்சியை அமைத்திட முடியும்' என, காங்கிரசு மேலிடம் தீவிரமாகப் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறது. இப்பிரசாரத்தை வாக்காளர்கள் நம்பவேண்டும் என்றும் காங்கிரசு மேலிடம் விரும்புகிறது.

நிலையான ஆட்சியைக் காங்கிரசுக் கட்சி ஒன்றினுல் மட்டுந்தான் அமைத்திட முடியும் என்ற கருத்தில் காங்கிரசு மேலிடத்திற்கு உறுதியான நம்பிக்கை இருந்தாலும் இலலாமற் போனாலும், அக்கருத்தை வாக்காளர்களே ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும் என்ற ஆசையில் காங்கிரசு மேலிடம் மூழ்கிக்கிடக்கிறது. காங்கிரசுக் கட்சியின் தலைவராக நிஜலிங்கப்பா அவர்கள், இக்கருத்தைத் திரும்பத் திரும்பப் பன்னிபன்னிக் கூறிக்கொண்டே வருகிறார்.

சனாதிபதி சமதர்மம், ஐந்தாண்டுத் திட்டம், தொழில் முன்னேற்றம், விவசாய வளர்ச்சி, வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குதல், அனைவருக்கும் வேலை தேடித் தருதல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் என்றெல்லாம் இதுவரையில் நான் பிரசாரம் செய்துவந்திருப்பதை, இனி மக்கள் நம்மமாட்டார்கள் என்ற முடிவிற்குக் காங்கிரசு மேலிடம் வந்துவிட்டிருக்கிறது என்பதற்கு, அவற்றைப் பற்றியெல்லாம் மூணுமுணுக்கக்கூடத் துணியாமல், மீண்டும் மீண்டும் 'நிலையான ஆட்சியைக் காங்கிரசுக் கட்சியினுல் மட்டுந்தான் அமைத்திட முடியும்' என்ற கருத்தை மக்களிடம் வீலை கூறி விற்பனே செய்ய முன்னந்திரப்பை ஒன்றே போதிய சான்றாகும். இதுவரை – அதாவது, சென்ற பொதுத்தேர்தல் வரை – சனாயக சமதர்மம், ஐந்தாண்டுத் திட்டம் என்றெல்லாம் மிகைபடக் கூறி, வாக்காளர்களை மயக்கி ஆதரவு பெற்றுவந்த காங்கிரசு மேலிடம், அக்கருத்துக்கள், 'வீலை போகாத பண்டங்கள்' என முடிவு கட்டி விட்டிருப்பது சிந்தனைக்குரியது.

இதுவரை தொடர்ந்து கூறிவந்துள்ள மேற்குறிப்பிட்ட கருத்துக்களே இனியும் கூறி, மக்களின் ஆதரவைப் பெறுவத் தனது தேர்தல் வெற்றியை உறுதி செய்துகொள்ள முடியாது என்ற உண்மையை சென்ற பொதுத்தேர்தலில் பல மாலிலங்களில் காங்கிரசுக் கட்சிக்குக்கிடைத்த படுதோல்வி மூலம், காங்கிரசு மேலிடம் அரிய படிப்பினையாகக் கொண்டது. அதற்குப் பதிலாக, 'எதைக் கூறி மக்களின் ஆதரவைப் பெறுவது' என்ற பெருங் கவலையுடன் இருந்துவந்த காங்கிரசு மேலிடத்துக்கு, கடந்த ஏழு மாதங்களுக்கு முன் அரியானு மாநிலத்தில் நடைபெற்ற இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்குக் கிடைத்த வெற்றி அரிய வாய்ப்பாக அமைந்தது. 'தீயில் மூழ்கித் தவிக்கின்றவன், சிறு துரும்பு கிடைத்தாலும் அதைப் பற்றிக்கொண்டு உயிர் பிழைக்க முயலுவான்' என்பது போல், காங்கிரசு மேலிடமும், அரியானுவில் பெற்ற ஜயப்பாட்டிற் குரிய வெற்றியைப் பயனடுத்தி, மற்ற மாலிலங்களில் மீண்டும் காங்கிரசுக் கட்சிக்கு வெற்றியைத் தேடிக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளது.

ஏழு மாதங்களுக்குமுன் அரியானுவில் பெற்ற வெற்றியை நயபியே, பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் முதலிய மாலிலங்களில் இடைக்காலத் தேர்தலே நடத்திவிட வேண்டும் என்ற முடிவுக்குக் காங்கிரசு மேலிடம் வந்துவிட்டது. மேற்படி நான்கு மாலிலங்களிலும் இடைக்காலத் தேர்தல் நடைபெறுவதற்கு, இடையில் இரண்டு திங்கள்கூட இல்லே. இதற்குள்ளாக, காங்கிரசு மேலிடத்துக்கு அரியானு மூட்டிய நம்பிக்கை ஆட்டம் கொடுத்து விட்டது. மற்ற அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து அமைக்கக்கூடிய ஆட்சியைப்போலவேதான், காங்கிரசுக் கட்சி அமைத்திடக்கூடிய ஆட்சியும் நிலையற்ற ஆட்சியாக — இடையிலேயே சரிந்துவிடக்கூடிய ஆட்சியாக இருந்திடும் என்ற உண்மையை, அரியானுவில் காங்கிரசு ஆட்சிக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி உறுதி செய்துவிட்டது.

பான்பிலால் அவர்களே முதலமைச்சராகக் கொண்ட காங்கிரசு அமைச்சரவை, அரியானு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. ஆட்சியை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்தே, காங்கிரசு அமைச்சரவைக்கு எதிராகக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே போர்க் கொடியைத் தூக்கினர். இப்படிப் போர்க் கொடியைத் தூக்கிய காங்கிரசுக் கட்சியினருக்கு, பகவத் தயாள் சர்மா அவர்கள் தலேவராவார்.

அரியானு காங்கிரசுக் கோட்டைக்குள்ளாக மூண்டுவிட்ட அரமணிகளுக்கு எனகத்தை வெளிக்குத் தெரியாமல் மூடி மறைத்திடக் காங்கிரசு மேலிடம் அரும்பாடுபட்டது; அம்முயற்சி வெற்றி தர வில்லே. இறுதியில், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பதினாறு சட்டப் பேரவை உறுப்பினர்களுடன் பகவத் தயாள் சர்மா, காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகினிட்டதாக அறிவித்தனர்.

இந்த விலகுதலால், சட்டப் பேரவைக் காங்கிரசுக் கட்சியின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில், காங்கிரசுக் கட்சியைவிட்டு வெளியேறிய சட்டப் பேரவை உறுப்பினர்களேயும், எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களேயும் சேர்த்துக்கொண்டு, தமக்குப் பெரும்பான்மை இருப்பதாக பகவத் தயாள் சர்மா, அரியானு ஆளுநரிடம் அறிவித்தார்.

சட்டப் பேரவையைக் கூட்டி, தாம் கூறுவது உண்மையா இல்லேயா என்பதை உறுதி செய்யவேண்டும் என்றும் சர்மா அவர்கள் ஆளுநரை வேண்டிக்கொண்டார். சர்மாவின் கோரிக்கையை ஆராய அவகாசம் வேண்டும் என்று ஆளுநர் அறிவித்தார்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அரசியல் கட்சி எதுவாக இருந்திட்டாலும், அக்கட்சியின் பெரும் பான்மை பற்றிய ஜயப்பாடு கிளம்பும்பட்சத்தில், 'அவ்வாறு ஜயப்பாடு கிளம்பிய ஏழு நாட்களுக்குள்ளாகச் சட்டப் பேரவையைக் கூட்டி, உண்மை நிலேயைக் கண்டறியவேண்டும் என்ற ஏற் பாட்டை, ஏற்கனவே நாடாளுமன்றத் தலேவர் சஞ்சீவ ரெட்டியார் அவர்கள் தலேமையில் கூடிய அனேத்துச் சட்டப் பேரவைத் தலேவர்கள் மாநாடு உருவாக்கி இருந்தது. அரியானு பிரச்சினே

திருவள்ளுவர் 2000 ஆண்டு விழா

கருத்தறியும் கூட்டம் செய்த முடிவுகள்

சென்னே, டிச. 24—

உலகப் பொதுமறை தந்த செந் நாப் புலவர் திருவள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு விழா நாடு முழுமையும் கொண்டாடுவதற் கான சருத்தறியும் சிறப்புக் கூட்டம், சென்னே மாவட்ட மத்திய நூலகத்தில் 21—12—68 காலே 9-மணிக்குக் கூடியது.

அமைப்பாளர்களில் ஒருவரான சலகை ப. கண்ணன், வருகை தந் திருந்த தமிழறிஞர்களே வரவேற்று கூட்டத் தலேவரை முன்மொழிந் தார்; முத் தமி ழ க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் வழி மொழிய தமிழ்நாட்டுக் கல்வித் துறை அமைச்சர் திரு. இரா. செ ழி ய ன் அவர்கள் தலேமையேற்று, திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு விழாக் கொண்டாடவேண்டிய இன் றி யமையாமை குறித்தும், அதனச் சிறப்பாக நடத்துவதற்கான வழி வகைகள் -- திட்டங்கள் -- செயல் முறைகள் குறித்தும் விளக்கிச் சொல்லி, மேற்கொண்டும் சிறப் பாக நடத்திட அறிஞர்கள் கருத்து வழங்கவேண்டும் எனறும் கேட்டுக் கொண்டார்.

மயிலே வி. சங்கரன் செட்டியார், புலவர் கு. உசேன், பாலூர் கண் ணப்ப முதலியார், திரு அ. கஜ பதி நாயகர், திரு. ப. வை. ஆறு முகம், கெல்லே இராசாமனுகம், திரு. சிலைகை பி.கண்டித், நூலகர் வெ. திலில நாயகம், பேராசிரியர் அப்துல் சபூர், ஏ. பி. சஞ்ஜீதனம எம.எல்.சி., ஒளவை ந. நடராசன், வேப்பேரி திரு. சவரிமுத்து, இராயபேட்டை இரா. பாலசுப்பிர மனியம், டி. கே. பகவதி, பெ. தூரன், டி. என். சிவதானு, திரு. வ. சுப்பையா பின்னே, கவிஞர் கா. மேழவேந்தன் எம். எல். ஏ., திருச்சி ந. இரா. ரைவர், தமிழாசிரியர் புரு டோத்தமன், கே. வேங்கடசுப்பிர மணியம், திரு. சிங்காரவேலர், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், டி. கே. சண்முகம், பெரும் புலவர் மே. வி. வேணு கோபாலப் பின்னே, ஓய்வுபெற்ற கலெக்டர் திரு. கோ. முத்துசாமிப் பின்னே ஆகியோர் விழாவுக்கான நல்ல பல கருத்துரைகளே வழங்கினர்கள்.

பின்னர் தலேமை தாங்கிய அமைச்சர் இரா. நெடுஞ்செழியன அவர்கள் பேசுகையில் குறிப்பிட்ட தாவது :—

"விழா நாட்களில் தெருவெங்கும் வினவுகள் அமைத்து -- தோர ணங்கள் கட்டிச் சிறப்பாகக் கொண்டாடவேண்டும்.

"தைப் கபாங்கலேயொட்டி வெளி வரும் பொங்கல் வாழ்த்துக் களில் குறட் கருத்துக்கள் கொடு க்கப் பெறுவதோடு அவற்றை விளக்கும் ஓவியங் களும் இடம்பெற வேண்டும்.

"நாட் காட்டிகளில் திருவள்ளு வர் திரு உருவத்தைப் பொறிப்ப தோடு, குறள் விளக்க ஓவியங் களும் இருக்கலாம்.

"'யுனெஸ்கே' வாயிலாகக் குற ளைப் பற்றிய நூலொன்றை வெளியிட்டச் செய்யலாம்."

பின்னர் கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன :—

திருவள்ளுவர் 2000-ஆம் ஆண்டு விழா, தைத் திங்களே முழுமை யும் தமிழ் நாட் டெங்கணும் கொண்டாடப்பட வேண்டும்.

முதலில் சென்னேயில் தை 1, 2, 3 ஆகிய நாட்களில் நடை பெறும்; பிற மாவட்டங்களில் தை 4-முதல் 30-ம் நாள்வரை கொண்டாடுதல் வேண்டும்.

தலேநகரில் நடைபெறவிருக்கும் விழாவில் 14—1—69-ல் ஊர்வலமும், 15, 16-ம் நாட் களில் கருத்தரங்கு, கலேயரங்கம், கலே நிகழ்ச்சி, குறட் காட்சி முதலியவையும் இடம் பெறுதல் வேண்டும்.

பொங்கல் திருநாளன்று மாலே யில் தலேநகரிலுள்ள தமிழ் மக் கள் அனேவரும் பங்குகொளும் வகையில் ஊர்வலம் நடைபெற வேண்டும். ஊர் வ ல த் தில், மாணவர்கள் -- ஆசிரியர்கள் -- தொ ழி லா ளர்கள் -- கலேஞர் கள் -- க லே ஞர் க ள் -- புலவர் கள் -- எ ழு த் தா ள ர் கள் -- நாடாளுமன்ற, சட்ட மன் ற, மாநகராட்சி உறுப்பினர்கள் -- தமிழக அமைச்சர்கள் -- அணி அணியாகக் கலந்துகொள்ள வேண்டும்.

ஊர்வலம் தீவுத் திடலிலிருந்து தொடங்கி கடற்கரையிலுள்ள காந்தி சிலேக்கு அருகில் முடியும்.

விழாவில் கலந் து கொள்ளத் தூண்டு முயற்சித் தலேவர் திரு. வி. வி. கிரி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்.

விழாவையொட்டித் திருக்குறள் பற்றி இதுவரை வெளியாகி யுள்ள திருக்குறள் பன்மொழி நூல்களும், குறட் கருத்துக்களே விளக்கும் வண்ண ஓவியங் களும், குறளில் பொதிந்துள்ள கருத்துக்களே காட்சியளவில் காட்டக்கூடிய பொருள்களும் கொண்ட காட்சியும் அமைக்கப் பட வேண்டும்.

இங்ங்ழச்சிகளேப் பொட்டிப் பிற மாவட்டங்களிலும் ஊர்வலங் கள், கருத்தரங்குகள், சொற் பொழிவுகள், கலேயரங்கங்கள் பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் முதலியவற்றை ஆங்காங்குள்ள தமிழ்ச் சங்கங் களும், திருக்குறட் சமூங்களும் சிறப்பாக நடத்த வேண்டும்.

இவ்விழாவைத் தலேநரில் சிறப் பாகக் கொண்டாடுவதற்குக் கீழ்க் காணும் குழு அமைக்கப்பட்டது :-

புலவர் :— முதலமைச்சர் அறி ஞர் அண்ணு.

தலேவர் :—தமிழவேள் பி. டி. இரசான.

பொருளாளர், தணைத் தலேவர்:— முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ பெ. விசுவநாதம்.

தணேத் தலேவர்கள் :—டாக்டர் மு. வரதராசனர், திரு. வ. சுப் பையா பின்னே, திரு. மா. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., திரு. எஸ். எஸ். வாசன், திரு. கருமுத்து தியாகராசர்.

செயலாளர்கள் :—திரு. சலகை ப. கண்ணன், திரு. இரா. முத்துக் குமாரசாமி.

மற்றும், அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களேத் தலே வராகக் கொண்ட செல்வாக்குள்ள வரவேறபுக் குழுவும், அமைச்சர் மு. கருணநிதி அவர்களேத் தலேவ ராகக் கொண்ட நிகழ்ச்சிக் குழு வும், வேறு ஊர்வலக் குழு, காட்சிக் குழுக்களும் அமைக்கப்பெற்றன.

பஞ்சாபில் காங்கிரசு அழையாகிறது

கைகழுவுவோர் பட்டியல் நீளுகிறது

சண்டிகார், நவ. 23—

பஞ்சாப் காங்கிரசுத் தலேவர் கியான் சிங் ரேர்வாலா காங்கிரசி லிருந்து விலகிவிட்டார்.

"பஞ்சாப் இடைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் காங்கிரசு வேட்பாளர்களேப் பொறுக்குவதில் காங்கிரசு மத்தியத் தேர்தல் குழு, வகுப்புவாத நோக்குடன் நடந்து கொண்டிருக்கிறது" என அவர் குற்றஞ்சாட்டினர்.

கல்லக்குப்பட்ட சட்டமன்றத்தில், காங்கிரசுக் கட்சித் தலேவராக அவர் இருந்தார்.

சட்டமன்றத்தில் துணே அவைத் தலேவராக இருந்த பல்தேவ் சிங் கும் காங்கிரசிலிருந்து விலகிவிட் டார்; தேர்தலில் நிற்க அவருக்கு டிக்கெட் தரப்படவில்லேயாம்.

காங்கிரசிலிருந்து கியான் சிங் ரேர்வாலா விலகி வில்ட டதைத் தொடர்ந்து ஏராளமான காங்கிரசு கர்நாடகர்கள் விலகிவிட்டதால், பாடின்டா மாவட்டக் காங்கிரசுக் கமிட்டி கலேக்கப்பட்டுவிட்டது.

காங்கிரசுக்காரர்கள் இவ்வாறு விலகியவுடத் தொடர்ந்து, மாவட்ட காங்கிரசுக் கமிட்டி செய லற்றுவிட்டதாம்.

பஞ்சாப் மாலில காங்கிரசுக் கமிட்டித் தலேவர் எல். என். மல்லோத்தரா, 500 காங்கிரசு ஊழியர்களுடன் தாமும் காங் கிரசைவிட்டு வெளியேறிவிட்ட தாக அறிக்கை ஒன்றில் கூறி யிருக்கிறார்.

மேலும், பஞ்சாப் மாலில காங் கிரசுக் கமிட்டியின் முன்னுள் தலேவர், துணேத் தலேவர் ஆகி யோருமுக்ட காங்கிரசிலிருந்து வெளியேறிவிட்டனர்.

பாட்டியாலா நகர காங்கிரசுக் கமிட்டியின் முன்னுள் பொதுச் செயலாளரும் காங் கி ர சைக் கைகழுவினுர்.

"கியான் சிங் ரேர்வாலா காங் கிரசிலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து பாடின்டா மாவட் டத்தில் மட்டும் 5,000 காங் கிரசுக்காரர்கள் காங் கி ர சி லிருந்து வெளியேறிவிட்டனர்"

என்று, பாடின்டா மாவட்ட வழக் கறிஞர்கள் சங்கத் தலேவர் தேஜா சிங், நந்தி ஒன்றில் கூறியிருக் கிறார்.

கியான் சிங் ரேர்வாலா, இப் போது அமிருதசரசில், அகாலி தளத் தலேவர் சனத் தலே சிங்கை சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்; இடைத் தேர்தலில் அவர், அகாலி தளத் தின் வேட்பாளராகத் தேர்ந் தெடுக்கப்படக்கூடும்.

நாடாளுமன்றத்தில் கிளப்பப்பட்டபொழுது, மேற்படி ஏற்பாட்டை சுட்டிக்காட்டி நாடாளுமன்றத் தலேவர், 'அரியானு சட்டப் பேர வைக்கிடக்கட்டி, உண்மையை அறிந்துகொள்ளவதே சிறந்த நடைமுறையாகும்' என அறிவித்தார்.

ஆனுல், நாடாளுமன்றத் தலேவர் அறிவிப்பை ஏற்றுச் செயல்பட, உள்துறை அமைச்சரும் விரும்பவில்லே -- காங்கிரசு மேலிடமும் விரும்பவில்லே. காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகிய வர்களின் தலேவராக இருக்கும் பகவத் தயாள் சர்மா மீது மட்டும் விட்டு, அவருடன் கட்சியைவிட்டு வெளியேறிய மற்றவர்களேக் காங்கிரசுக் கட்சிக்குள்ளாகவே வைத்துக்கொள்ள காங்கிரசு மேலிடம் முடிவு கட்டியது.

காங்கிரசுக் கட்சியை விட்டு வெறியேறிய பகவத் தயாள் சர்மாவுடன் வெளியேறியதாக அறிவித்த மற்ற காங்கிரசுக் கட்சி யினரை, காங்கிரசுக் கட்சிக்குள்ளாகவே இருக்க வைக்கக் காங் கிரசு மேலிடம் எந்த முறையைக் கைகொண்டிருக்குமோ எனபது வெளிப்படை. அம்முறை உலகறிந்த இரகசியம்.

அரியானு அமைச்சரவை விரிவுபடுத்தப்படுகிறது. எதிர்ப் பாளர்களில் சிலர், அமைச்சர்களாக ஆக்கப்படுவர். பான்சிலால் அமைச்சரவை தற்காலிகமாக நிலேத்து நிற்கும். ஆனுல், அந்த அமைச்சரவை நீடிக்குமா ? காங்கிரசுக் கட்சி ஒன்றினுல் மட்டுந் தான் நிலேயான ஆட்சியை அமைத்திட முடியும் என்ற காங்கிரசு மேலிடத்தின் வீராப்புப் பேச்சு வெறும் கற்பணேயல்லவா ?

—கா. க.

மூன்று திங்களில் ரூ. 2.25 கோடி!

மக்கள்நலத் திட்டங்கட்கு மக்களே மனமுவந்து அளிக்கும் பணம்

தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் திட்டம் பெற்று வரும் அமோக ஆதரவு

சென்னை, டிச. 23—தமிழக அரசின் பரிசுச் சீட்டு மூலம் சுமார் மூன்றரைக் கோடி மக்களைக்கொண்ட தமிழகத்தில், கடந்த மூன்று மாதங்களில் 33 புதிய இலட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளனர்.

இதுவரை நடைபெற்றுள்ள மூன்று பரிசுக் குலுக்கல்களிலிருந்து தமிழக அரசுக்குக் கிடைத்துள்ள வருமானம் திரண்டுகோல் கோடி ரூபாய் ஆகும்.

8 வரிசைகள் வெளியிடப்பட்ட முதல் குலுக்கலிலும், 11 வரிசைகள் வெளியிடப்பட்ட இரண்டாவது குலுக்கலிலும் சேர்ந்து அரசுக்கு சுமார் ரூ. 1 கோடி 25 இலட்சம் கிடைத்து; 14 வரிசைகள் வெளியிடப்பட்ட மூன்றாவது குலுக்கலில் மட்டும் ரூ. 1 கோடி 80 இலட்சம் அளவுக்கு வருமானம் கிடைத்துள்ளது.

சுமார் 35 இலட்சம் ரூபாய்க்கு பரிசுத் தொகை--மிஞ்சுமே ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்கிறது.

மக்கள் தாங்களாகவே வழங்கும் பணம் மீண்டும் மக்களின் நல வாழ்வுத் திட்டங்களுக்குத்தான் செலவிடப்படும் என்ற நம்பிக்கை உறுதியாக ஏற்பட்டு விட்டால், ஒரு சிலர் இலட்சாதிபதியாவதைக் கண்டு பரிசு பெறுத பல்லாயிரக்கணக்கான பேர்கள் மனமுடைந்து போக வேண்டிய அவசியமில்லை.

அறந்தாங்கி வட்ட தி. மு. கழகம்

குழுக் கூட்ட முடிவுகள்

அறந்தாங்கி வட்ட தி. மு. க. கட்டம் இரா. இராசன் அறவை மில்லில் 14—12—68-ல், அவைத் தலைவர் இராம. அசோகன் தலைமையில் -- மாவட்டச் செயலாளர் மன்னை மு. நாராயணசாமி முன்னிலையில் நடைபெற்றது; அப்போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

மறைந்த சமர முன்னணி வீரர்கள் அரசர்குளம் தோழர் நடராசன், சுப்பிரணியபுரம் தோழர் காசினாதன், மேலப்பாப்பனூர் தோழர் வடிவேலு ஆகியோருக்கு அனுதாபம் தெரிவிக்கப் பட்டது; ஒரு நிமிட நேரம் மவுனம் மேற்கொள்ளப்பட்டது.

அறிஞர் அண்ணு சிகிச்சை நிதிக்கு வட்டச் செயலாளர் மணலூர் இராமனுதன் கழகப் பொருளாளரிடம் ரூ. 501 அளித்ததற்கு வட்டக் கழகம் ஏகமனதாக ஒப்பு தல் அளித்தது.

வட்டக் கழக வளர்ச்சி நிதிக்குக் கிளை ஒவ்வொன்றும் ரூ. 15-வீதம் 31—12—68-க்குள் வட்டக் கழகத் திற்கு அனுப்புவதென்று முடிவு எடுத்து ஏறறுக்கொள்ளப்பட்டது.

அறந்தாங்கி வட்டத்திலுள்ள மீமிசல், ஆவுடையார்கோவில், கட்டுமாவடி, மணமேல்குடி, சிலட்டூர ஆகிய உயர்நிலைப் பளளிகளுக்கு பொதுமகனின் பங்குத் தொகையை பாக்கியைச் சட்டமன்ற உறுப்பினர் ஆ. துரையரசன், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத் தலைவர் இரா. இராசன், ஆவுடையார்கோவில் ஒன்றியத் தலைவர் கா. கருப்பையா, வட்டச் செயலாளர் மணலூர் இராமனுதன் ஆகியோர் முன்னிலை வகித்து செய்து உரிய இடத்தில் ஒப்படைக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது

சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆ. துவரயரசன மூலம் வட்டச் செயலாளர் மணலூர் இராமனுதன், வட்டக் கழகப் பணியினைக்கு ஏற்ப பாடி செயல்படுவது, ஆவன செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பேரறிஞர் அண்ணு அவர்களுக்குச் சிகிச்சையளித்த அமெரிக்க டாக்டர் திரு. மில்லர் அவர்களுக்கும், தமிழக டாக்டர் தீரு. சதாசிவத்திற்கும் வட்டக் கழகத்தன சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் நன்றியையும், வணக்கத்தையும் அறிவித்துக்கொண்டது.

தமிழக அரசு நீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்ட 'தமிழ்நாடு' பெயர் மாற்ற மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றி தமிழ் மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பளித்த மத்திய அரசுக்கும், இந்த முயற்சியில் வெற்றி காண்ட மாநில அரசுக்கும், பேரறிஞர் அண்ணு அவர்களுக்கும் வட்டக் கழகம் தன னன்றியையும் வணக்கதையும் தெரிவிப்பதோடு, 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டுமெனக் கோரி உண்ணு கோண்டு இருந்து உயிர்நீத்த தியாகச் செம்மல் சங்கரலிங்கனாருக்கு தன் வீரவணக்கதையும் தெரிவித்துக்கொண்டது.

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க.

குழுக்கூட்ட முடிவுகள்

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம், 8—12—68 காலை 11 மணிக்கு, தற்காலிக அவைத் தலைவர் தி. ந. சம்பந்தம் தலைமையில், காஞ்சிபுரம் இராச வீதி, 115 எண்ணுள்ள கட்டிடத்தில் நடைபெற்றது; அதுபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :—

"சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கத் தமிழ நச் சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி, அதற்கான சட்டத் திருத்தம் செய்யக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள், 'தமிழ் நாடு' தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் சட்டத் திருத்தம் செய்ததற்கு இம்மாவட்டக் குழு தன்னுடைய மனமார்ந்த நன்றியுறிதலே மத்திய — மாநில அரசுகளுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது."

"நகராட்சித் மன்றத் தேர்தல் சம்பந்தமாக மாவட்டச் செயலரையே தலைவராகவும், பகுதிச் செட்மன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள், பகுதி வட்டச் செயலர்கள் நகரச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாகவும், மேலும் மாவட்டத் துணைச் செயலாளர் -- அவைத் தலைவர் -- மாவட்டப் பொருளாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும், மேலும் மாவட்டப் பிரதிநிதிகள் இருவரைச் சேர்த்துக் கொண்டும் நகராட்சித் தேர்தல் குறித்து ஆய்வு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது."

"நகராட்சித் தேர்தல் நிகியாக மாவட்டத்திற்குட்பட்ட நகராட்சிப் பகுதியில் வருல் செய்கிற நிதியை அந்தந்த நகராட்சித் தேர்தலுக்கே செலவு செய்யுமெனவும், நகராட்சி வேபாளருடைய வேட்பாளர் மனு கட்டணமாக வருல் செய்கிற ரூ 25-ரு மாவட்ட நிதியில் சேர்த்துக் கொள்ளுவதெனவும், மாவட்டச் செயலாளர் குழுவுடன் வருகிற செலவை அந்தந்த வட்ட -- நகராட்சிகள் ஏற்றுக்கொள்ளுவதெனவும், மேற்படி நிதி வருல் செய்வதற்கு அந்தந்தப் பகுதி -- நகர -- வட்டச் செயலாளர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் அடங்கிய குழுவருல் செய்யவதெனவும் முடிவெடுத்து, நகராட்சித் தேர்தலில் இடம்பெருவது -- மாவட்டத்திற்குட்பட்ட வட்டங்களும், வட்டச் செயலாளரும், சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்களும் மேற்படி நகராட்சித் தேர்தலுக்குக் கணிசமான அளவு நிதி வருல் செய்து தரக் கேட்டுக்கொள்ளவதெனும் முடிவு செய்யப்பட்டது."

"மாவட்டக் கழகத்தின் பயனுக்காக உன்று வண்டிவ வாங்குவதற்காக மாவட்டத்தின் எல்லா சட்டமன்ற -- மேலவை -- நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களால இயன்ற நிதி உதவி செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டது."

"அறிஞர் அண்ணுவின் அறுவைச் சிகிச்சை நிதிக்காக ஒவ்வொரு வட்டமும் ஆயிரம் ரூபாய் வீதம் வருவித்து மாவட்டத்தின் சார்பில் ரூபாய் பத்தாயிரம் அளிப்பதென முடிவு செய்யப்பட்டது,"

"அத்தத மாவட்டக் குழுவை மீண்டுரில் கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டது."

தென்னைப் பயிரிட பரம்பிக்குளம் நீர்

சென்னை, டிச. 24—

"சுமார் 3570 ஏக்கர் தென்னை பயிருக்கு உதவுவதற்காகப் பரம் பிக்குளம் முக்கியக் காலவாயிலிருந்து மாதத்தில் சில நாட்களுக்கு தண்ணீர் விடப்படும்"

என்று தனிக் செட் குறிப்பு ஒன்று கூறுகிறது.

தண்ணீர் விடப்படும் தேதியும், எந்தெந்த கிராமங்களுக்குத் தண்ணீர் விடப்படும் என்ற விவரங்களும், அந்தந்தப் பகுதிகளில் அறிவிக்கப்படும்.

மாநிலத் தமிழாசிரியர் மாநாடு

நான்கு அமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்

மாநிலத் தமிழாசிரியர் கழகப் பதினேராம் மாநாட்டின் வரவேற்புக் குழு, சென்ற 26—11—68-ல் வரவேற்புக் குழுத் தலைவர் திரு. மா. கி. தசரதன் எம்.ஏ. தலைமையில், சென்னப் பச்சையப்பன் உயர்பள்ளியில் கூடியது.

மாநிலக் கழகதின் பொதுச் செயலாளரும், மாநகரக் கழகத்தின் தலைவருமாகிய பேராசிரியர் அன்பு கணபதி அவர்கள் அன்வரையும் வரவேற்றார்.

டிசம்பர் 27-ஆம் நாள் சென்னை பாலர் அரங்கில் மாநிலத் தமிழாசிரியர் கழகப் பதினேராம் மாநாட்டின் நடத்துவதெனவும், மாநாட்டில் மாலேயில் கலியரங்கும் கருத்தரங்கும் நடத்துவது எனவும் முடிவுகள் மேற்கொள்ளப் பெற்றன.

கல்வியமைச்சர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் காலேயில் மாநாட்டினைத் தொடக்கி வைப்பார்.

கழகத்தின் தலேவராயிருந்தபோக டர் அ. சிதம்பரநாதன் அவர்களின் உருவப்படத்தை உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் திறந்து வைப்பார்.

மாநகரக் கழகத்தின் தலேவராயிருந்த மயில் சிவமுத்து அவர்கள் உருவப்படத்தைத் தமிழ நாசிரன் கல்வி ஆலோசகர் திரு. கெ. து. சுந்தரவடிவேலு திறந்து வைப்பார்.

மாலேயில் நடைபெறும் 'கல்லூரிகளில் பயிற்றுமொழி' பற்றிநடக்கும் கருத்தரங்கில் பிறறுறைப் பேராசிரியர் எழுவர் உரையாற்றுவர்; பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணுதி அவர்கள், இக்கருத்தரங்குக்குத் தலேமை வகிக்கிறார்.

புலவர் அறுவர் பங்குகொள்ளும் 'தமிழ்-ஆறு' பற்றிய கவியரங்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் தலேமை யில் நடைபெறும்.

கழகத் தலேவர் புலவர் ந. துரைசாமி எம் ஏ., அவர்கள் மாநாட்டுக்குத் தலேமை தாங்கு வார்.

முதல் நாள் (26—12—68) மாலே யில் பொதுக் குழுவும், தமிழாசிரியர் கூட்டமும் கூடித் தீர்மானங் களை ஆய்ந்து முடிவு செய்யும்; மாநாட்டு அன்று பகலில் கூடும் தமிழாசிரியர் பொதுப் பேரவை யில் முற்கள்ளர் ஆய்வு செப்பம் செய்த தீர்மானங்கள் நிறைவேற் றப்பெறும்.

ஏற்றுமதியில் மோசடி

சுங்க அதிகாரிகளும் உடந்தை!

பம்பாய், டிச. 22—

பம்பாயில் 24 வர்த்தக நிறுவனங் களை மத்திய புலன் விசாரணைப் போலீசார் சோதனேயிட்டு, சன் றேடுகளைக் கைப்பற்றினர்.

இந்த வர்த்தக நிறுவனத்தினருடன் சுங்கத் துறை அதிகாரிகள் சிலரும் ஏற்றுமதி -- இறக்குமதியில் மோசடி செய்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

'எவர்சில்வர் பாத்திரங்கள்' என்ற பெயரில் மூலிகைகள் ஏற்று மதி செய்திருப்பதாக புலன் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறது.

இது சம்பந்தமாக இரண்டு சுங்க அதிகாரிகளின் வீடுகளிலும் சோதனே யிட்டதில் ஒருவருடைய வீட்டில் நடை உட்பட ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமான சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டது; மற்றொரு வர் வீட்டில் 7,500 ரொக்கதையை கைப்பற்றினர்.

மத்திய புலன் விசாரணே போலீசார் மேலும் விசாரணே செய்து வருகின்றனர்.

குளித்தலே வட்ட தி.மு.க.

குழுக் கூட்ட முடிவுகள்

14—12—68-ல் குளித்தலே-கடம்பர் கோவில் 'அன்னியர்'த்தில் குளித்தலே வட்ட தி மு. க. செயற் குழுக் கூட்டம், அவைத் தலேவர் மீ. சு. இளமுருகு பொற்செவி தலேமையில் நடைபெற்றது.

செப்டம்பரில் அரிஞர் அண்ணு அவர்களது 60-வது பிறந்த தின விழாவிற்காக வரவு ரு 2635-ம்; செலவு ரு. 2779.88-ம் ஏறறுக் கொள்ளப்பட்டும், செலவில் கூடுதலாக செலவாகியுள்ள ரு. 184.88-ம் வராத கிளக் சமுகங்களில் வசூலித்து நேரடியாகவோ அல்லது மாவட்டத்தில் சேர்க்கவோ முடிவு செய்யப்பட்டது.

மற்றுமோர் தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது.

நாமக்கல்லில் கழகப் பொதுக்கூட்டம்

நாமக்கல் நகர கருணுதி மன் றம், பழனிவேலன் படிப்பகம் சார்பில் 15—12—68 இரவு 8-மணியள வில் நாமக்கல் தி. மு. க. பாவை யில் ஓர் பொதுக்கூட்டம் நடை பெறறது. வட்ட தி. மு. க தலேமை செயலாளர் இரா. வையபரி தலேமைவகித்தார். அரசியல், கலேவை முன் இராமலிங்கம், சேலம் அன்புக்கரசு, டி. பழனிவேலன், பி. தியாகராசன் பி.ஏ.பி.எல்., ந. சுக்ரிரகேரன், நா. செம்பு, எ. மாரியப்பன் ஆகியோர் சொற் பொழிவாற்றினர். இறுதியில் மன் றப் தலேவர் ந. சுக்ரிரகேரன் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற் றது.

விக்டோரியா மண்டபம்

பொதுவிழாக்கள் நடத்த அனுமதிக்கும் திட்டம்

சென்னை, டிச. 24—

விக்டோரியா மண்டபத்தைப் புதுப்பித்து, நியாயமான கட்டணத் தில் பொதுமக்கள் அதில் விழா நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனு மதிக்கும் ஒரு திட்டத்தை சென்னை புதிய வெஞ்சி திரு. சுக்தாலல் தயாரித்துள்ளார்.

சென்னை மாகராட்சிக்குச் சொந்தமான இந்த மண்டபம், வெஞ்சி அதிகாரத்தின்கீழ் இருக்கிறது; 'இந்தத் திட்டம் என்னுடைய பதவிக்காலத்திலேயே நிறைவேறினுல் பெரிதும் மன நிறைவு பெறுவேன்' என்று அவர் குறிப்பிட்டார்.

'தஞ்சை அமுதம்'

திருத்துறைப்பூண்டித் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் முத்துப்பேட்டை. தாமலிங்கம் அவர்கள் ஆசிரியராக் கொண்டு, 'தஞ்சை அமுதம்' என்னும் திங்கள் இதழ் வெளிவரவிருக்கிறது.

தைத் திங்களில் முதல் இதழ் வெளிவரும். விவரங்கட்கு தொடர்பு கொள்க :—

நிர்வாகி, 'அமுதம்', முத்துப் பேட்டை, தஞ்சை மாவட்டம்.

மறைவு

பூலிருந்தவல்லி தி. மு. க. கின் யின் முன்னுள் துணைச் செயலாளர் இராசகபாதர் 13—12—68-ல் இயற்கையெய்தினர். தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் டி. இராசகதிநினம், முன்னுள் வட்டச் செயலாளர் பி. சின்னசாமி, மற்றும் கழகத் தோழர்கள் மலர் மாலேகள் அணிவித்தனர் தங்கள் இறுதி வணக்கதைச் செலுத்தினர்.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தோகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

	ரூ. காசு
23-12-68 இதழ்த் தொடர்ச்சி	1,34,004.73
உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் காளக்குறிச்சி வட்டத்தில் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களில் கழக அமைப்புகளாலும் தனிப்பட்டவர்களாலும் அளிக்கப்பட்ட நிதி -- வட்டச் செயலாளர் மூலம் (நிதியளித்தவர்களின் விவரம் தனியே வெளியிடப்படும்)	1,161.10
பவானியில் நடந்த பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களிடம் அளிக்கப்பட்டது	10.01
கி. மனோகரன் எம்.பி.	500.00
ஜி. பி. சோமசுந்தரம்	500.00
கெல்லி பன்னீர்செல்வம்	3.00
ஜி. ஜெகதீசன்	500.00
வேம்பாடு தி. மு. க.	11.20
அயன்பொம்மையாபுரம் தி. மு. க.	11.00
பாளையங்கோட்டை ஏ. எல். சுப்பிரமணியம் பி.எஸ்சி., பி.எல். எம்.எல்.ஏ.	250.00
திருத்துறைப்பூண்டி டி. எஸ். கல்யாணசுந்தரம் மூலம்:—	
ஏ. என். ஏ. அகமது மைதீன் 50.00	
டி., எஸ். கல்யாணசுந்தரம் 25.00	
எம். இராமையன் 25.00	
பி. கோபாலகிருட்டினன் 25.00	125.00
புதுநகர் -- நெய்வேலி தி. சண்முகம் மூலமாக:—	
நெய்வேலி 1, 3 நிர்வாகக் குழுவினர்கள் 45.00	
12-வது வட்டம் குத்தறிவு மன்றம் 31.00	
27-வது வட்டம் அண்ணா மன்றம் 10.00	
26-வது வடமம் செல்வராசு மன்றம் 10.00	
4-வது வட்டம் காவலர் மன்றம் 10 00	
தொ.மு.ச. செயற்குழு உறுப்பினர் வி. குப்புசாமி 5.000	111.00
தேவகோட்டை க. தியாகராசன்	71.00
சைதை பம்மல் நல்லதம்பி (விவரப்படி)	54 00
திருவெறும்பூர் தி. ப. சர்புதீன், செயலாளர் தி.மு.க.	51,00
செயங்கொண்டசோழபுரம் வை. கோவிந்தராசன் மூலம்:—	
தமிழக அரசு பரிசுச் சீட்டு முகவர்கள் 15 பேர் 30.00	
கழகத் தோழர்கள் 9.00	39 00
சென்னை வி. சந்திரன் எல்.எம்.ஈ. நண்பர்கள்	35.00
அயோத்தியாப்பட்டணம் வி. கருப்பண்ணன் மூலம்— மோகனூர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் சார்பில்	32.00
துறையூர் எஸ். பெருமாள்	25.00
சான்றோர்குப்பம் கே. பி. சானகிராமன் மூலம்—கே.பி. சானகிராமன், ஆர். சுந்தரேசன் எம்.சி., எம். சின்னதம்பி, ஜே. சி. ஆனந்தன், ஜே. பி. சுந்தரம்	25.00
உடுமலைப்பேட்டை எம். ஆறுமுகம் 20.00	
ஸ்டேன்லி 5.00	25.00
குளிக்கரை எஸ். பிச்சையப்பா (நாதஸ்வரம்)	25.00
பெங்களூர்—துர்வினிநகர் டி. கிருட்டினன் மூலம்:— இந்திய தொலைபேசித் தொழிலகத் தோழர்கள்	
தொ. இரா. நித்தியானந்தம் 2.00	
து. கிருட்டினன் 2.00	
தட்சிணமூர்த்தி 2.00	
அ. கு. தாமலிங்கம் 3.00	
அ. மேசாக் 2 00	
கு. பூபதி 2.00	
ச. சானகிராமன் 2.00	
க. சாமியப்பன் 2.00	
எல். என்றி 2.00	
கு. சாமிநாதன் 1.00	
சபபதி 1.00	21.00
மாயூரம் எம். சபாநாயகம் மூலம்—மாயூரம் முனிசிபல் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் சார்பாக	20.00
பொன்மலை இரா. துரைராசன் மூலமாக—கன்னையன், இராம்மூர்த், சேவியர், விக்டர் பிரான்சிஸ், இராம சாமி, செவக்கி, தங்கவேல், வெங்கடேசன், பஞ்சாப கேசன், வரதராசன், நடராசன், இராமானுசம், வெங்கடராமன், கன்னையன்	20.00
குருசாமிபாளையம் எம். கே. காசிவிசுவநாதன், தலைவர், எம்.ஜி.ஆர். மன்றம்	20.00
அரியாகவுண்டம்பட்டி பி. எஸ். இராமசாமி (மாவட்ட பிரதிநிதி)	20.00
இராம்சிநகர் நா. கண்ணுசாமி, செயலாளர் தி. மு. க. மூலம்—இராம்சிநகர் கிளைக் கழகம்	20.00
சென்னை சாமிநாதன், தூணைச் செயலாளர் மூலம் — பறங்கிமலை கிளைக் கழகச் சார்பாக	20.00
திவ்கோகர் எம். முத்து நண்பர்கள்	16.00
செஞ்சி எம். ஜி. ஆர். மன்றச் சார்பாக	15.00
மங்தாரகுப்பம் கிளைக் கழகச் சார்பாக	15.00
திருவத்திபுரம் ஆர். இராமநாதன்	15.00
இராம்நகர் ஆனைமலை ஏ. ஆர். விசயராகவன்	15.00
பேராவூரணி அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் சார்பாக	12.00
திண்டுக்கல் அ. அ. வை. அண்ணாமலை	11.00
கோவில்பட்டி கரு. தெ. சி. நடராசன்	11 00
சென்னை ம. பொ. சி. நகர் அ. நூருதீன்	10.00
கோயம்பத்தூர் மு. தாமோதரன்	10.00
திருச்சி மு. நடராசன், செயலாளர் வட்ட தி.மு. கழகம்	10,00
செந்தாரப்பட்டி செ. பெ. இராசகோபாலன் (செயற்குழு உறுப்பினர்)	10.00
செந்தாரப்பட்டி என். செயராமன் மூலம்—கிளைக்கழகச் சார்பாக	10.00
கிழக்கு தாம்பரம் இரா. திருநாவுக்கரசு	10.00
இராசபாளையம் ப. விசயன்	10.00
திருப்புவனம் கே. வாசுமூலம்—கே. வாசு 5.00	
ஜி. பெருமாள் 5.00	10.00
செந்தாரப்பட்டி என். செயராமன், செயலாளர் தி. மு. க.	10 00
சென்னை ம. சோ. தனிகாசலம்	9 54
ஆற்காடு ஏ. டி. சானகிராமன்	5 00
ஆற்காடு ஆர். வெங்கடாசலபதி	5.00
நாகர்கோயில் வி. வைத்தியாநாதன்	5.00
கோயில்பட்டி த. இரத்தினசாமி அன் சன்ஸ்	5.00
திருவண்ணாமலை என். வெங்கடாசலம்	5.00
சீர்காழி சு. கோ. கிருட்டினமூர்த்திமூலம்—சு. கோ. கிருட்டினமூர்த்தி, மு. இராமகிருட்டினன், த. கிருட்டினசாமி, செ. திருநாவுக்கரசு, இரவி சங்கர் ஆகியோர்	5.00
மாதானம் ஞான. இராசமாணிக்கம்	5.00
கீழாராய் ஆ. துரைராசு கலிவாணர் தேநீர் விடுதி	5.00
பிச்சனூர் செ. கோவிந்தராசன்	5.00
பொள்ளாச்சி சி. பழனிசாமி	5.00
செம்மேடு சு. இராசு ஊராட்சி உறுப்பினர்	5.00
மாச்சம்பாளையம் சு. மருதப்பன்	5.00
வீரவல்லூர் மதியரசி	5.00
தப்பளாம்புலியூர் சு. தெட்சிணமூர்த்தி, செயலாளர் தி. மு. க.	5.00
இளும்காட்டுப்பட்டி கி. சிதம்பரம் மூலம்:— மாணவ மாணவியர் சி. அருள் 3.00 / 1 00	4.00
96-பருத்தியூர் பாரதிதாசன் மன்றம்	3 00
திருச்சி சமால் முகமது கல்லூரி மாணவர் டி. வைத்திலிங்கம், மூன்றுண்டு வணிகவியல்	1.11
திருநகரம் மா. தில்லை சிதம்பரம் டீ ஸ்டால்	1.00
செந்தாரப்பட்டி கே. சுந்தரம்	1.00
சென்னை கல்யாணம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவி பர்வதபரமேசுவரி	1.00
ஆக மொத்தம்	1,38,000.69

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

25—12—68

கொண்டப்பநாயக்கன் பாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 5 மணிக்கு; கழகப் பணிமனை முன்பு; தலைவர்: கே. பி. சின்னுசாமிக் கவுண்டர்; பேசுவோர்: செ. அ. இராசமாணிக்கம், செ. அர்ங்காயகம், கே. எஸ். ஆனந்தன், பி. ஏ. சாமிநாதன் எம்.பி., எஸ். ஜி. கண்ணப்பர், எஸ். கே. சுப்பிரமணியம், ஜி. பி. வெங்கடு.

மதுரை

31-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பச்சை நாச்சியம்மன் கோவில் தெருவில் (டவுன் ஹால் அருகில்); தலைவர்; ஆ. மாரியப்பன்; பேசுவோர்: தேரளசுங்தரம், எஸ். முத்து எம்.எல்.சி., சொர. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., குதிருப்பதி பி.ஏ.பி.எல்., கூடலரசன், சி. நடராசன்.

26—12—68

மதுரை

14-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு சிமாகக்கல் மாரியம்மன் திடலில்; தலைவர்: அ. பன்னீர்செல்வம்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., சோர. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., மா. சங்கரபாண்டியன், கு. திருப்பதி, எஸ். காமராஜ், கூடலரசன், பி. எஸ். இராமசுப்பிரமணியம், எழிலரசன், கா. பாண்டியராசன், மு. இராமசாமி.

ஆள்பெயர் தெரியாமலே அந்நியச் செலாவணி அனுமதியா?

பட்டியலே வெளியிடமறுப்பதன் மர்மம் என்ன?

மத்திய வர்த்தக அமைச்சுத்துறைமீது கடும் குற்றச்சாட்டு

புதுடில்லி, டிச. 23—

நாடாளுமன்ற மேலவையில் மத்திய வர்த்தக அமைச்சகத்தின் மீது எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும், காங்கிரசு உறுப்பினர்களும் கடும் கண்டனமும், குற்றச்சாட்டும் தெரிவித்தனர்.

வர்த்தகத்துறைத் தொடர்பாக ஐந்து வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்வதற்கென ஆறு பேர் அடங்கிய குழு ஒன்றை மத்தியவர்த்தக அமைச்சகத்தின்கீழ் செயல்படும் இந்திய வெளிநாட்டு வர்த்தகக் கவுன்சில் நியமித்துள்ளது.

இந்தக் குழுவின் செலவுக்கென வெளிநாட்டுச் செலாவணிக்கும் மத்திய வர்த்தகத் துறை ஏற்கனவே அனுமதி வழங்கி விட்டது; ஆனால், இந்தக் குழுவில் வெளிநாடு செல்ல இருப்பவர்கள் யார் யார் என்று மத்திய வர்த்தக அமைச்சகத் தக்குத் தெரியாதாம்.

இந்தக் குழு மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரிட்டன், ருமேனியா யூகோஸ்லேவியா ஆகிய ஐந்து நாடுகளில் 25 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்.

"தற்போது இந்தக் குழுவின் பயணம் ஒத்திப்போடப்பட்டிருக்கிறது என்று இந்திய வெளிநாட்டு வர்த்தகக் கவுன்சில் தகவல் தந்துள்ளது" என்று முதலில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த மத்திய வர்த்தகத் துறை இணை அமைச்சர் முகமது ஷாபிகுரேஷி கூறினார்.

எதிர்க் கட்சியினர் கண்டனம் தெரிவித்தபோது, காங்கிரசு உறுப்பினர்களும் எதிர்க் கட்சியினருடன் சேர்ந்துகொண்டனர்.

"மேற்கூறிய குழுவில் செல்ல இருப்போர்களுக்கான வெளி நாட்டுச் செலாவணியை அரசாங்கம் ஏற்கனவே அனுமதித்துள்ளது; எனவே, இந்த நிலையில், அந்தக் குழுவில் செல்ல இருப்பவர்களின் பெயர்களை வெளியிடாக வேண்டும்"

என்று காங்கிரசு உறுப்பினர்களான பர்கவா, சங்கிரசேகரன், குல்கர்னி ஆகியோர் அமைச்சரை வற்புறுத்தினர்.

"அந்தக் குழு உறுப்பினர்கள் பற்றிய தகவல் எனக்குத் தெரியாது" என்றார் அமைச்சர்.

அமைச்சரின் பதிலுக்கு எதிர்க் கட்சியினர் கண்டனம் தெரிவித்தனர்.

"நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தைப் பெருக்கும்விதத்தில் அரசாங்கச் செலவில் வெளிநாடுகளுக்கு அனுப்பப் விருக்கும் குழுவில் உள்ளவர்கள் யார் என்று தெரியாமலே மத்திய வர்த்தக அமைச்சகம் எப்படி அந்தக் குழுவின் செலவுக்கான வெளிநாட்டுச் செலாவணிக்கு அனுமதி அளித்தது?" என்று உறுப்பினர்கள் பலத்த கண்டனம் தெரிவித்தனர்.

"அந்தக் குழு உறுப்பினர்களின் பெயரை அமைச்சர் வெளியிட முன்வரவில்லையானால், இந்த விவகாரத்தில் ஏதோ ஐயத்துக்குரிய மர்மம் அடங்கியிருக்க வேண்டும் என்றுதான் பொருள்" என்று இராஜநாராயணன் கூறினார்.

சரணர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம்

தமிழ்நாட்டில் என். சி. சி. பயிற்சி வசதிப்பட்டிருப்பதால், சாரணர் இயக்கத்தின் நடவடிக்கைகள் விரிவு செய்யப்படும்.

தற்போது தமிழ்நாட்டில் சுமார் 60,000 சிறுவர்--சிறுமியர் சாரணர் இயக்கத்தில் உள்ளனர்.

உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து 5 இலட்சம், மாணவர் -- மாணவிகளை இந்த இயக்கத்தில் சேர்ப்பது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

சென. 27-ந் தேதியன்று மாலை அளவில் சாரணர் இயக்க 'கம் புரியை கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சென்னையில் ஆரம்பித்து வைப்பார்; நிதி பதி கே. வீராசாமி தலைமை தாங்குவார்.

மருத்துவமனையில் வி. எஸ். கோவிந்தராசன்

சென்னை—புரசைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. எஸ். கோவிந்தராசன் உடல் நிலை பாதிக்கப்பட்டு, சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்க்கு சிகிச்சை பெற்று வருகிறார். உடல் நிலை தேறிவருகிறது.

இராமிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியீடு பவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு திராவிட அச்சகத்தில் (24, ஜூபிலிதாரா மான செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு, தென்னை பதிப்பகத்திலிருந்து வெளியிடப்பட்டது.